21st November 1963]

MR. SPEAKER : Let the hon. Member put a supplementary question relating to the main question.

பார்லிமெண்டில் என்ன சொன்னார்கள் என்பதைப்பற்றிக் கவலையில்லை. இப்போது இந்தக் கேள்விக்குப் பதில் சொல்வதற்கு இன்பர்மேஷன் கிடைப்பதற்கு ஏதாவது வழியிருக்கிறது என்றால் அதைப்பற்றிக் கேளுங்கள்.

திரு. கரு. சீமைச்சாமி: பார்லிமெண்டில் இவ்விதம் சொல்லி யிருக்கிறார்கள் . . .

MR. SPEAKER : Question No. 357.

மாதர் சங்க கட்டிடம் (சத்தியமங்கலம்)

*** 357 கேள்வி.—திரு. கு. கோபால கவுண்டர்:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) செஞ்சி தாலுகா சத்தியமங்கலம் கிராமத்தில் மாதர் சங்கத்திற்காகக் கட்டிடம் கட்ட ஆரம்பித்து நின்றிருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? அதன் காரணமென்ன?

(இ) 1963-64 நிதி ஆண்டிலாவது அதைக் கட்டி முடிக்க உத்தேசமுண்டா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) தெரியும். அக் கட்டிடம் தனியார் ஒருவரின் நிதி ஆதார வசதிகளைக் கொண்டே, அவரால் கட்ட ஆரம்பிக்கப்பட்டது.

(இ) ஆதலால், இக்கேள்வி எழுவதற்கு இடமில்லை.

திரு. கு. கோபால கவுண்டர்: சத்தியமங்கலம் கிராமம் ஒரு குக்கிராமமாக இருக்கின்ற காரணத்தினாலும், இங்கு சப்-ரெஜிஸ் டிரார் ஆபீஸ், உயர்நிலைப் பள்ளி, பிரைமரி ஹெல்த் செண்டர், போலீஸ் நிலையம் இவைகளெல்லாம் இருக்கின்ற காரணத்தால், இந்த இடங்களுக்கு வருகின்ற அதிகாரிகள் தங்குவதற்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே இதற்கான கட்டிடத்தை சீக்கிரத் திலேயே கட்டிக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இந்தக் கேள்வி மாதர் சங்கத்திற்காகக் கட்டப்படும் கட்டிடத்தைப் பற்றியது. கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்பது போல் டூரிஸ்ட் ஹோம் பற்றியது அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கக்குவான் தடுப்பு ஊசி

*** 358 கேள்வி.—புலவர் கா. கோவிந்தன்:** கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) சிறு குழந்தைகளுக்கு கக்குவான் இருமல் நோய் வராமல் தடுக்கும் தடுப்பு ஊசிகள் இப்போது போடப்பட்டு வருகின்றனவா?

[21st November 1963

(இ) இல்லையென்றால், இனியாவது ஊசி போடுவதற்கு நடவடிக்கை எடுக்க உத்தேசமுண்டா ?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : (a) & (b) A pilot scheme for the immunisation of pre-school children against whooping cough, diphtheria and tetanus is being implemented in the primary health centres at Velliyur and Tirukkalukundram of Chingleput district. Mass immunisation of pre-school children will be taken up as a state wide programme as soon as the results of the pilot scheme are evaluated.

திரு. கரு. சீமைச்சாமி : கனம் தலைவர் அவர்களே, இந்த சிறு குழந்தை வியாதியான கக்குவான் இருமலுக்குத் தக்க மருந்தே இல்லை என்று டாக்டர்கள் எல்லாம் சொல்லுகின்றார்கள். இந்த வியாதி வந்துவிட்டால் குழந்தைகள் மூன்று மாதங்கள் செத்துத் தான் பிழைக்கின்றன. ஆகவே இந்த விஞ்ஞான உலகத்தில் இதைத் தடுப்பதற்கான தக்க மருந்து ஒன்றைக் கண்டுபிடிக்க சர்க்கார் ஏதாவது ஏற்பாடு செய்வார்களா என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : சார், இந்த கக்குவான் இருமல் நோய் வந்தால் மூன்று மாதம் நீடிக்கும் என்று டாக்டர்கள் சொல்லுகிறார்கள். தமிழ் மருந்துகளில் கூட, இந்த நோய் மூன்று பிறை இருக்கும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதைத் தடுக்கின்ற முறையில் ப்ரீ—ஸ்கூல்—குழந்தைகளுக்கு எல்லாம் ட்ரிப்பிள்—வாக்ஸைன் கொடுக்கவேண்டும் என்று அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த விஞ்ஞான நோக்கில் இந்த வியாதியை ஓரளவுக்குப் பெருகாமல் தடுப்பதற்கான மருந்துகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். இருந்தாலும் மூன்று மாதங்கள் வரை நோய்க்குக் காலாவதி உண்டு என்று சொல்லுகிறார்கள். ஆகவே இந்த நோயைத் தடுத்துவிட முடியாது என்பதும் டாக்டர்களின் அபிப்பிராயம்.

புலவர் கா. கோவிந்தன் : இந்தக் கக்குவான் இருமல் நோயைத் தடுப்பதற்கான மருந்தை அதிக விலை கொடுத்து சாதாரண மக்கள் வாங்க முடியாமல் இருப்பதினால், எல்லோரும் அம்மை குத்திக் கொள்ளவேண்டும் என்று நிர்ப்பந்தம் இருப்பது போல், இதற்கான தடுப்பு மருந்தையும் குத்திக்கொள்ளவேண்டும் என்று அரசாங்கம் ஏதாவது ஏற்பாடு செய்யுமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : நான் முன்னால் சொன்ன மூலக்கேள்வியின் பதிலே அது தான்.

Poet Bharathi (Birth day celebrations)

* 359 Q.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Chief Minister be pleased to state when a final decision would be taken regarding the celebration of the birthday of Poet Bharathi on 11th December each year in future?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : There is no such proposal, Sir.